சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளில் வாழும் மகளிர் மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் பயன்பெறும் வகையில் விடியல் பயணத் திட்டத்தை விரிவுப்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை [சந3(1)] துறை

அரசாணை (நிலை) எண்.11 நாள் 24.02.2024.

சோபகிருது மாசி 12
திருவள்ளுவராண்டு 2055
படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.19 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந3) துறை, நாள்.07.05.2021.
2. அரசாணை (நிலை) எண்.21, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் [ சந3(1)] துறை, நாள் 03.06.2021.
3. வரவு செலவுத் திட்ட உரை அறிவிப்பு, நாள் 19.02.2024.
4. போக்குவரத்துத் துறைத் தலைவரது கருத்துரு நாள் 19.09.2023 மற்றும் 20.02.2024

*****

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் இயங்கும் சாதாரண கட்டணப் நகரப் பேருந்துகளில், பணிபுரியும் மகளிர் மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிருக்கும் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், திருநங்கையர் தங்களது சமூகப் பொருளாதார தேவைகளுக்கென வெளியில் செல்லும்போது அவர்களது பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்திடும் பொருட்டு அனைத்து அரசு போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் திருநங்கையர் நல வாரியத்தில் பதியப்பெற்று வழங்கப்படும் அடையாள அட்டையுடன் பயணம் மேற்கொள்ளும் திருநங்கையர் அனைவரும் கட்டணமில்லாப் பயணச் சீட்டுடன் பயணம் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

(த.பி.பா)

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அறிவிப்பில் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 19.02.2024 அன்று ஆற்றிய வரவு செலவுத் திட்ட உரையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> "மாநிலத்தின் மலைப்பகுதிகளில் வாழும் மகளிர் பயன்பெறும் வகையில் நீலகிரி மாவட்டம், கொடைக்கானல், வால்பாறை போன்ற மலைப்பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தபடும். மகளிரின் பேராதரவு பெற்ற இத்திட்டத்திற்கான மானியத் தொகையாக 3,050 கோடி ரூபாயை 2024–2025 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அரசு ஒதுக்கியுள்ளது."

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட போக்குவரத்துத் துறைத் தலைவரது கருத்துருவில், நகரப் பேருந்துகள் இல்லாத இடங்களில் விடியல் பயணத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டன என்றும், தமிழ்நாட்டில் மலைப் பகுதிகளில் இயக்கப்படும் பேருந்துகள் மோட்டார் வாகனச் சட்டப்படி மலைப் பேருந்து (Ghat) எனக் குறிப்பிடப்படுகிறது என்றும் பேருந்துகள் ஏற்ற இறக்கங்கள் உள்ள மலைப்பகுதியில் இயக்கப்படுவதால் பாதுகாப்பு கருதி பயணிகள் நின்று பயணம் (standees) செய்வதற்கு அனுமதி இல்லை என்றும் போக்குவரத்துக் கழகங்கள் வாரியாக விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர் மதுரை அகிய மாவட்டங்களில் 475 மலைப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்றும், 100% மலைப் பகுதிகள் (Fully Ghat) மற்றும் பகுதி மலைப்பகுதிகளில் (Partially Ghat) இயக்கப்படும் சாதாரண கட்டண பேருந்துகளில் பேருந்து வசதி உள்ள பகுதிகளில் (Served Area) 35 கி.மீ வரையிலும் மற்றும் பேருந்து வசதியில்லாத பகுதிகளில் (Unserved Area) 40 கி.மீ வரையிலும் இயக்கலாம் எனவும் அதற்கான இழப்பீட்டுத் தொகையை ஒரு பயனாளிக்கு ரூ.22/– வீதம் சம்மந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடுசெய்யும் வகையில் இழப்பீடு வழங்குமாறு போக்குவரத்துத் துறைத் தலைவர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்கூறியவற்றின் அடிப்படையில், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரது அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளில் வாழும் மகளிர் மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் 100% மலைப் பகுதிகள் (Fully Ghat) மற்றும் பகுதி மலைப்பகுதிகளில் (Partialy Ghat) இயக்கப்படும் சாதாரண கட்டணப் பேருந்துகளில் பேருந்து வசதி உள்ள பகுதிகளில் (Served Area) 35 கி.மீ வரையிலும் மற்றும் பேருந்து வசதியில்லாத பகுதிகளில் (Unserved Area) 40 கி.மீ வரையிலும் பயன்பெறும் வகையில் விடியல் பயணத் திட்டத்தை விரிவுப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. மேலும், இத்திட்டத்தை விரிவுப்படுத்துவதினால் ஏற்படும் இழப்பீட்டை ஈடுசெய்யும் பொருட்டு இழப்பீட்டு தொகையை ஒரு பயனாளிக்கு ரூ.22/– வீதம் சம்மந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியமாக வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அதன் அ.சா.கு. எண்.20/DS(SA)/2024, நாள் 23.02.2024–ன்படி வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி//

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்
போக்குவரத்துத் துறைத் தலைவர்,
தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், சென்னை
கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9.
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை – 9.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை.
இருப்பிட தணிக்கை அலுவலர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18

**நகல்:–**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (போக்குவரத்து)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்
செயலாளர் அவர்களின் முதன்மைத் தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை 9.
நிதி (ச.ந/வ.செ.பொ–2/வ.வ–1)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந2) துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்